

விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் திருத்தங்கல் கிளை நூலகத்தில் பொது நூலகத்துறை சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ் நூலகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் . உடன் சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், பகுதிச் செயலாளர் காளிராஜன் ஆகியோர் இருந்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி, மண்டபம், அரியமான் ஆகிய பகுதிகளில் 16.02.2025 அன்று சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி முன்னிலையில், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### நெல்லை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு சிப்காட் தொழில் பூங்கா – பல்வேறு திட்டங்கள்!

# ‘திராவிட மாடல்’ முதல்வருக்கு மக்கள் சார்பில் நன்றி!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை.பிப்.18-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

தமிழகம் திராவிட மாடல் முதலமைச்சர் தலைமையில் கடந்த நான்கு ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து இந்தியாவில் நம்பர் 1 மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது.இந்த வளர்ச்சியில் திருநெல்வேலி மாவட்டத்திலும் அனைத்து தரப்பு மக்களும் அரசின் நலத்திட்டங்களை பெற்று மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடந்த நான்கு ஆண்டுகளில் விவசாய பூமியான நெல்லை மாவட்டத்தில் குறையாத மழை பெய்து மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள பெரும்பாலான விளைநிலங்களில் பயிர்கள் பயிரிடப்பட்டு விவசாயிகள் நல்ல பலனை அடைந்து மகிழ்ச்சியில் உள்ளனர்.

திராவிடம் மாடல் அரசில் தொழில்துறையில் திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் புதிதாக தொடங்கப்பட்டதின் பயனாக படித்த பல இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர். கடந்த பிப்ரவரி 6,7 தேதிகளில் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பணம் செய்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி,கழக நிர்வாகிகள் கள ஆய்வு மேற்கொண்ட தங்களுக்கு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும் மாவட்ட மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் தங்களால் திறந்து வைக்கப்பட்ட டாட்டா பவர் சோலார் நிறுவனத்தில் நெல்லை,தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்களும், பெண்களும் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர். மேலும் அதே வளாகத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள விக்ரம் சோலார் நிறுவனத்திலும் மாவட்டத்திலுள்ள படித்த பட்டாதாரிகளுக்கு அதிகமான வேலை வாய்ப்புகள் பெரும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் 07.02.2025 அன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நெல்லை சீமைக்காக அறிவிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தின் எதிர்கால தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு நாங்குநேரி தாலுகா மறுகால்குறிச்சி, திருவரங்கமங்கைபுரம் ஆகிய கிராமங்களில் 2291 ஏக்கர் பரப்பளவில் புதிய சிப்காட் தொழில் பூங்கா, மூலக்கரைப்பட்டி 1200 ஏக்கர் தரிசு நிலத்தில் புதிய சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்படும் என்று தாங்கள் அறிவித்ததற்கு மாவட்ட மக்கள் தங்களுக்கு கோடான கோடி நன்றியை கூறியுள்ளனர்.

இந்த சிப்காட் தொழில் பூங்காக்களால் நெல்லை மாவட்டம் தொழில்கள் நிறைந்த மாவட்டமாக மாறும்.விவசாய பூமியான இந்த மாவட்டம் மழை பொய்த்து போகும் ஆண்டுகளில் மக்கள் தொழில் ஏதும் இன்றி,தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நிலையில் இருந்தவர்களுக்கு,இந்த தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும் போது அவர்களின் வாழ்வு மேம்படும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தங்களின் இந்த சுற்றுப்பயணத்தில் லட்சக்கணக்கான பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள்,வியாபார பெருங்குடி மக்கள்,கழகத் தோழர்கள், கழக மகளிர் அணியினர் அனைவரும் திரண்டு இரு நாட்களும் தங்களை மன தார வரவேற்று மகிழ்ந்தனர். தங்களை வரவேற்க நெல்லை மாநகரின் சாலையோரம் நின்ற தாய்மார்களும்,இளம் சிறார்களும் தங்களின் கையை பற்றி உள்ளம் மகிழ்ந்தனர். இளைய தலைமுறையினர் தங்களை “அப்பா” என்று அழைத்து மகிழ்ந்ததை காண முடிந்தது.இந்த வரவேற்பு நிகழ்ச்சி சிறப்பாக அமைவதற்கு இரவும்,பகலும் தொடர்ந்து பணியாற்றிய கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர்களுக்கு உதவியும்,ஆலோசனைகளையும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என். நேரு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் இதுபோன்று ஒரு வரவேற்பு நிகழ்ச்சியை இதுவரை கண்டதில்லை.தங்கள் வருகை தந்து சென்ற பின்பும் மாவட்டத்தில் மக்களி டையே புதிய எழுச்சியை கழகம் கண்டுள்ளது. கழக நிர்வாகிகளும்,கள ஆய்வு நிகழ்ச்சிக்கு பிறகு கழக நிர்வாகிகள் புத்துணர்ச்சியை பெற்றுள்ளனர்.இன்னும் ஒவ்வொரு நாளும் தங்களின் புதிய அறிவிப்பால், வரும் பொது தேர்தலில் நெல்லை மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்ட மன்ற தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் தங்களின் சுற்றுப்பயணம் ‘வெற்றி பயணமாக’ அமைத்து தந்தமைக்கும்,மாவட்டத்தில் கழகத்திற்கு மேலும் வலுசேர்த்து தந்தமைக்கும் தங்களுக்கு நெல்லை மாவட்ட பொது மக்கள் சார்பாகவும், ஒன்றிணைந்த நெல்லை மாவட்ட கழகத் தோழர்கள் சார்பாகவும்,நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இன்று கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

# மாநில – மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப். 18-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (18.02.2025) அண்ணா அறிவாலயத்திலுள்ள கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது. எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாநிலச் செயலாளர் அ.சுபேர்கான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான் அவர்களின் தலைமையில் இன்று (18.02.2025 செவ்வாய்க் கிழமை) காலை 10:00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர், ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு டாக்டர் சுபேர்கான் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தேனி தெற்கு மாவட்டம் – கம்பம் நகரக் கழக அவைத் தலைவர்

# மொழிப் போர்த் தியாகி எஸ்.எம்.பாண்டியன் மறைவு!

## கம்பம் ந.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. – தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. அஞ்சலி!



கம்பம், பிப். 18-

தேனி தெற்கு மாவட்டம் கம்பத்தில் மொழிப் போர்த் தியாகி எஸ்.எம். பாண்டியன் 14.2.2025 வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 84.


இவர் கம்பம் நகர அவைத் தலைவராக பணியாற்றியுள்ளார். இவருடைய மனைவி தற்போது கம்பம் தெற்கு நகர் கழக துணை செயலாளர் பதவி வகித்து வருகிறார். இவருக்கு எஸ்.எம்.பி.மணிகண்டன் எனும் மகனும் உள்ளார். பல ஆண்டுகளாக கருப்பு சிவப்பு துண்டு அணிந்து வருவதால் கழக உடன் பிறப்புகள், நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவராலும் துண்டுப் பாண்டி என்ற பெயர் பெற்றவர். கடைசி காலம் வரைக்கும் தி.மு.க.வையும் கலைஞரையும் முழு மூச்சாகவே நினைத்து வாழ்ந்து வந்தவர்.

அன்னாரது இறுதி சடங்குகள் 15.2.2025 அன்று நடைபெற்றன.

அன்னாரது இறுதி சடங்கில் தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கம்பம் ந.ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் பி.செல்வேந்திரன், மாநில கழக உயர்நிலை செயல் திட்ட உறுப்பினர் எல்.மூக்கையா, கழக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் இரா. பாண்டியன், மாநில கழக தீர்மானக் குழு இணைச் செயலாளர் எம்.ஜெயக்குமார், கம்பம் வடக்கு நகர் கழக செயலாளர் எம்.சி.வீரபாண்டியன், கம்பம் தெற்கு நகர் கழக பொறுப்பாளர் பி.பால்பாண்டி ராஜா, கம்பம் நகர் கழக முன்னாள் செயலாளர் துரை நெப்போலியன், கூடலூர் நகர் கழக செயலாளர் சி.லோகந்துரை, மாநில கழகச் செயற்குழு உறுப்பினர் குருகுமரன், மாநில சீர்மரபினர் உறுப்பினர் சூர்யா தங்கராஜ், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் குரு இளங்கோ, முன்னாள் மாநில கழகச் செயற்குழு உறுப்பினர் எம்.ஏ. அரசேந்திரன், முன்னாள் மாநில கழக பொதுக்குழு உறுப்பினர் முல்லை சேகர், தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் டிஸ்கோ அலாவுதீன், முன்னாள் நகர் மன்ற தலைவர் எஸ். டி.டி.இளங்கோவன், தேனி மாவட்ட அறங்காவல் குழு தலைவர் செந்தில், மாவட்ட அறங்காவல் குழு உறுப்பினர் கே.வி.பி. முருகேசன், கம்பம் தெற்கு நகர் கழக துணை செயலாளர் த.செல்வம், 31வது வார்டு கழக செயலாளர் சி.எம்.உதயகுமார், தெற்கு மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் பேச்சாளர் முருகேசன், தெற்கு நகர் கழக அவைத் தலைவர் ராஜன், தெற்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் மொக்கை பாலு, தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கம்பம் சாதிக், நகர் மன்ற உறுப்பினர் ஏ.விருமாண்டி, வார்டு செயலாளர் இந்திர கர்ணன், எஸ். கே.மாரியப்பன், முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரராகவன், கோடி கலை செல்வன், கத்திசேகர், சிவயகிரி, அருண்குமார், வடிவேல், வடமலை உள்ளிட்ட கம்பம் வடக்கு, தெற்கு நகர் கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், சார்பு அணி, மாவட்ட நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள் அனைத்துக் கட்சி தலைவர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்குடி மதியழகன்
### பிப்ரவரி 18 (1974)



கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 22-02-2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18
நாள்– 17.02.2025

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி.

# அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

திமுக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற 22.02.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநில தலைவர் **டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி.** தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: 1. மார்ச் 1ம் தேதி, கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம் குறித்து.**

**2. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் வளர்ச்சி குறித்த ஆலோசனை**

**இடம்:** அண்ணா அறிவாலயம்
சென்னை – 18
நாள் : 17.02.2025

**டி.செங்குட்டுவன்,**
மாநில செயலாளர்,
தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பனை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் துணை மேயர் ராஜ்,வழக்கறிஞர் ஏ. எல்.பி.தினேஷ் உள்ளனர்.



நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.வை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். நிகழ்வில் மூத்த முன்னோடி நாதன்,தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,மாநகர துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம்,பிரபு,இளைஞர் அணி அலி ஃப் மீரான் மற்றும் மாயா, வேங்கை வெங்கடேஷ்,அவதார் ஷாஜகான்,ராபர்ட் செல்லையா, கிங் பாலா,மனோகரன்,கேபிள் குமரேசன்,காஜா மைதீன், கதிரேசன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.